# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகம் (கூட்டிணைத்தல்)

**மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அவர்களால்*
*2016, சனவரி மாதம் 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2015, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

**[ 71 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகம் (கூட்டிணைத்தல்)

### மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

"மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டு ள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகம்" எனும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட

ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதோடு, அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் : அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஆசிரியர்களுடன் முறையான தொடர்பாடல்களை ஏற்படுத்துதலும் மற்றும் ஆலோசனைகள், ஒத்துழைப்பு அத்துடன் தேவையானவர்களுக்கு உதவி வழங்கி அவர்களின் பொதுவான தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஊக்குவிப்பு வழங்குதல் ;

(ஆ) தகைமைகள் மற்றும் அனுபவத்துடன்கூடிய பரீட்சைகளுக்கான பரிசோதகர் குழுவை உருவாக்கி அவர்களுக்கு பயிற்சி வழங்கிக் கொண்டுநடாத்துதலும், நிறுவகத்தினால் விதப்புரை செய்யப்பட்ட விடயத்துறைகளுக்கு ஏற்ப பரீட்சைகளை நடாத்துதல் ;

(இ) வினைத்திறனுடனும், நியாயமான வகையிலும் பரீட்சைகளை நடாத்தி விரைவாக பெறுபேறுகளை விநியோகித்தல் ;

(ஈ) நிறுவகத்தின் ஆசிரியர் குழு உறுப்பினர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சியை வழங்குதல் ;

(உ) ஆங்கில மொழி பற்றிய விரிவான தகைமைகளை ஏற்படுத்தலும், பிள்ளைகள் மற்றும் முதியோரினது ஆங்கில மொழி பற்றிய அறிவை மேம்படுத்தலும், நம்பிக்கையுடன் உலகிற்கு முகங்கொடுக்கக்கூடியவாறு அவர்களுடைய தொடர்பாடல் சக்தியை முன்னேற்றகரமாக்கல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையானதும், இடைநேர்விளைவானதும், விரும்பத்தக்கதுமான எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்கு அவசியமாகின்ற ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல், பிணையாகப் பெறல், விற்றல், கொடுத்துமாற்றல் அல்லது வேறு வகையில் கையாளல், பொறுப்பித்தல் அல்லது கையளித்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் உத்தியோகத்தர் அல்லது முகவர் மூலமாகச் செய்து கொள்ளலும் அமுலாக்கலும் ;

(இ) காசாகவோ அல்லது வேறு வகையிலான கொடைகள், அன்பளிப்புகள் அல்லது வெகுமதிகளைக் கோருதல், பெற்றுக்கொள்ளல் அத்துடன் சேகரித்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதியங்களை முதலீடு செய்தல், நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்கலும் அவற்றை நிர்வகித்தலும் மற்றும் வங்கியொன்றில் நடைமுறை வைப்புக்களையும் சேமிப்புக் கணக்குகளையும் பேணிவருதல் ;

(உ) புத்தகங்கள், பருவகால வெளியீடுகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை பிரசுரித்தல் அல்லது பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நூல் நிலையங்கள், புத்தகக் கடைகள் மற்றும் அச்சகங்களை நிறுவுதலும் பேணி வருதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்கு அவசியமான பணத்தை கூட்டுத்தாபனத்தினால் பொருத்தமானதென குறிப்பிடப்படுகின்ற விதத்திலும் அவ்வாறு பொருத்த மானதென கருதப்படுகின்ற பிணையின் மீதும் கடனாகப் பெறுதல் அல்லது முதலீடு செய்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மை, உறுப்பினர் களைச் சேர்த்துக்கொள்ளல் மற்றும் கூட்டுத் தாபனத்தால் அல்லது கூட்டுத்தாபனத்தின் பொருட்டு நடத்தப்படும் பாடநெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் சேர்த்துக்கொள்வதற்கான கட்டணங்கள், சந்தாப் பணங்கள், உதவு தொகைகளைத் தீர்மானித்து அறவீடு செய்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அமுலாக்கு வதற்கு அவசியமான உத்தியோகத்தர்களையும் போதனாசிரியர்களையும், பணியாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றம் செய்தல், அவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு, அவர்களின் சேவை விதிகளையும் நிபந்தனைகளையும் விதித்தல் மற்றும் பதவி நீக்கஞ் செய்தல் ;

(ஐ) ஆங்கில மொழியைப் பேசுதல், எழுதுதல் மற்றும் சங்கீதக் கலை சார்ந்த பரீட்சைகளுக்குப் பாட விதப்புரையை விநியோகித்தல் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை எய்துவதற்கு ஏனைய அவசியமான அல்லது உகந்ததெனக் கருதும் எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, தேர்ந்து நியமிக்கப்படும் தலைவர், உபதலைவர், செயலாளர், பெருளாளர் மற்றும் பிற இரண்டு உறுப்பினர்களையும் கொண்ட "பணிப்பாளர் சபை" ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிறுவகத்தின் பணிப்பாளர் சபையாதல் வேண்டும். இச்சட்டத்தின் விதிகளுக்கு அமைய புதிய பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கும் வரை அவர்கள் தமது பதவிகளை வகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்களைப் பதவிநீக்கஞ் செய்தல்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது பதவியை வறிதாக்கல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை என்பன ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் அவை தொடர்பான நடவடிக்கை முறையும் அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல், முகாமை செய்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவது போன்று அதே போன்ற கூட்டத்திலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தவும், மாற்றவும் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும் படலாம்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு முந்திய தினத்தில் வலுவிலுள்ளதான நிறுவனத்தின் விதிகள் இச்சட்டத்தினதும் அல்லது வேறு எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வகையில் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாக கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், செலவினங்களும் சொத்துக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்படும் கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் குறைந்தது ஆண்டுக்கு ஒரு தடவையேனும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு, கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

*நிறுவகத்தினால் செலுத்தப் படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்பட வேண்டியனவுமான கடன்கள்.*

**9.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய, இச்சட்டத்தின்

நோக்கத்துக்காக அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க வுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பணிப்பாளர் சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவர் மற்றும் செயலாளர் அல்லது பணிப்பாளர் சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓராளின் முன்னிலை யிலன்றி எவ்விதமான சாசனமெதிலும் பொறிக்கப்படலா காதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு சான்றாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறான தாதல் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படு தலாகாதென்பதோடு, அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் உறுப்பினர்களி டையே பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப் பட்டிருப்பதுமான நிறுவனமொன்றுக்கு கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்